



# நகர் ஊரமைப்பு துறை(DTCP)

## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம்

## சின்னவீரம்பட்டி ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சின்னவீரம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண்: 71/2A –ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்

வரைபடம் ( திட்டமில்லா பகுதி)

அளவு :1:400

வ

இணையதள விண்ணப்ப எண் : QQW3Y9K6 நாள் :30.12.2022

**குறிப்பு:**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : | 0.915 ஏக்கர் (அ)3700.00 ச.மீ |
| ஒதுக்கிய மனைகள் | : | 15 |
| மனைப்பிரிவின் எல்லை | | |
| நிலையிலுள்ள சாலை | | |

**பொது ஒதுக்கீடுகள்:**

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :

I. மனைப்பிரிவு சாலை பரப்பு : 755.33 ச.மீ

II. ஒதுக்கப்பட வேண்டிய பூங்கா பரப்பு : [மனைப்பிரிவின் பரப்பு – மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு] x 10%

[ 3700.00 ச.மீ – 755.33 ச.மீ ] x 10% = 294.47ச.மீ

ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு : 294.47 ச.மீ= 10.00% (மனுதாரரால் உரிய அரசு கணக்குத் தலைப்பில் அரசு வழிகாட்டு மதிப்பீடு தொகை செலுத்தி உள்ளார் )

III. பொது உபயோகம்

(A) LOCAL BODY (உள்ளாட்சிக்கு) ஒதுக்கப்பட வேண்டிய பரப்பு = [மனைப்பிரிவின் பரப்பு – மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு] x 0.5 / 100

[ 3700.00 ச.மீ– 755.33 ச.மீ]x 0.5/100 = 14.72 ச.மீ

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு= 21.00 ச.மீ = 0.71%

(B) TANGEDCO/உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டிய பரப்பு = [மனைப்பிரிவின் பரப்பு – மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு] x 0.5 / 100

[ 12500.00ச.மீ – 2771.92 ச.மீ] x 0.5/100 = 14.72 ச.மீ

உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு= 25.37 ச.மீ= 0.86%

**கட்டிட வரம்பு :**

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ –ம் விடப்படல் வேண்டும்.

9.0மீ மேல் 18.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0மீ –ம் விடப்படல் வேண்டும்.

**மூலை முடக்கு :**

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5 மீ–ம் விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை ( MA-1 ) நாள்: 04.02.2019 மற்றும் அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020– ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண். 181, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 09.12.2020–ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. அரசாணை எண். 141, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 16.07.2022–ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார்சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதிகள், மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகள் மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை உள்ளாட்சியால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைப்பிரிவுகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6 மீ x 1.2மீ என்ற குறைந்தபட்ச அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து ஊராட்சி பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்

**SWP / DTCP / TIRUPPUR / LAYOUT NO: 127/2023**

ராகேஷ் ரவி
அளவர்/ உதவி வரைவாளர்

Signature Not Verified
Signed by: Assistant Director
Location: Tiruppur
Date: 2023.05.11 15:08:42

ரா.செபஸ்தி ரோசாலி
மேற்பார்வையாளர்

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருப்பூர் மாவட்டம்.